2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூறியது பற்றியும் கண்டிப்பாக ஆலோசனை செய்யப்படும்.*

(ஆ) தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் விலை உயர்வால் உற்பத்தி நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை உயர்வு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் கோவி. செழியன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக மாண்புமிகு உறுப்பினர்திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள் ஆகியோர் விதி எண் 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள் .*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள்*

அதிகமாக இருக்கிறார்கள். தீப்பெட்டித் தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 2 வருட காலத்தில், கொரோனா காலத்தில் இந்தத் தொழிற்சாலைகள் இயங்காத காரணத்தினாலும், தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்ட காரணத்தினாலும் அவர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தற்போது, கடந்த 6 மாத காலமாக தீப்பெட்டி தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாகவும், உற்பத்தி செய்யக்கூடிய தீப்பெட்டியின் விலையை உயர்த்தி விற்க முடியாத காரணத்தினாலும், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், தீப்பெட்டி அலகை கடந்த 4 நாட்களாக மூடியிருக்கிறார்கள். இந்த மூலப்பொருட்களின் விலையேற்றத்தைத் தவிர்க்கக்கூடிய வகையில், வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய பல மூலப்பொருட்களின் விலையைக் குறைக்கக் கோரினால், அங்கிருந்து மூலப்பொருட்கள் வருவதில் தாமதம் ஏற்படும். இதன் காரணத்தினாலும், மூலப்பொருட்களின் விலையில் ஏற்றம் இருக்கிறது. எனவே, மூலப்பொருட்களுக்கான விலையேற்றத்தைக் குறைக்கக்கூடிய வகையில், அரசின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில், இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பாகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இது வந்ததன் காரணத்தினால், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களை அழைத்து, இந்த விலையேற்றத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லி, நேற்றையதினமே உற்பத்தியாளர்களுடைய கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

முற்பகல் 11–30

நானும் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன். நிறைய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக நானும் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

***திரு. கடம்பூர் ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தபடியாக தென் மாவட்ட

2022 ஏப்ரல் 12] [திரு. கடம்பூர் ராஜு]

மக்களின், குறிப்பாக ஏழைப் பெண் தொழிலாளர்கள் மற்றும் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக இருப்பது தீப்பெட்டி தொழில். அந்தவகையிலே, தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, கழுகுமலை, கயத்தார், விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம் போன்ற இடங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இன்றைக்கு மூலப்பொருட்களின் விலையேற்றத்தினால் இயங்காமல் நிற்கின்றன. Potassium chloride, cardboard அட்டை மற்றும் wax ஆகிய 3 மூலப்பொருட்களின் விலையேற்றம் இன்றைக்கு 35 சதவிகிதம் முதல் 45 சதவிகிதம் வரை ஏற்பட்டிருக்கிறது. இதனால், மேற்குறிப்பிட்ட அத்தனை பகுதிகளிலும் உள்ள 2,560 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, கிட்டத்தட்ட 6 இலட்சம் தொழிலாளர்கள், குறிப்பாக, ஏழை பெண் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். கடந்த 6 ஆம் தேதியிலிருந்து 17 ஆம் தேதி வரை முதற்கட்டமாக இந்த மூலப்பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், அதைக் கட்டுப்படுத்தி, அந்தத் தொழிலை நடத்த வேண்டுமென்றும் எண்ணியிருந்தார்கள். முன்பு 600 தீப்பெட்டிகள் கொண்ட bundle–ன் விலை 300 ரூபாயாக இருந்தது. ஆனால், உற்பத்தியாளர்கள், தொழிற்சாலைகளை மூடுவதற்கு மாற்றாக 300 ரூபாய் இருக்கின்ற bundle விலைக்கு, கூடுதலாக 50 ரூபாய் உயர்த்தி, 350 ரூபாய் என்று நிர்ணயித்து தீப்பெட்டித் தொழிலை நடத்த இருந்தார்கள். ஆனால், அந்த நேரத்தில் கொள்முதல் வியாபாரிகள் விலையேற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்ன காரணத்தினால், அவை மூடப்பட்டு பல்வேறு நிலைகளிலே தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளெல்லோரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். ஆனால், அந்தக் கூட்டத்திலே ஒரு முடிவு எட்டப்பட்டதாக தகவல் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஓர் அசாதாரண சூழ்நிலை 2020–லே தீப்பெட்டித் தொழிலுக்கு வந்தது. அன்றைக்கு G.S.T. வரி 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அன்றைக்கு இன்றைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். . .

[2022 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கவன ஈர்ப்பில் நீங்கள் debate மாதிரி பேசினால் எப்படி? விஷயத்திற்கு வாருங்கள். முக்கியப் பிரச்சினை குறித்து அவையின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: அன்றைக்கு இருந்த முதலமைச்சர் G.S.T. வரியைக் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு மத்திய நிதியமைச்சரிடம் வலியுறுத்த, நானே நேரடியாக தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளை டெல்லிக்கு அழைத்துச் சென்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: அழைத்துச் சென்று பேசியதன்பேரில், அந்த வரி 12 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. அப்படி குறைக்கப்பட்டதன் காரணமாக அன்றைக்கு தீப்பெட்டித் தொழில் பாதுகாக்கப்பட்டது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைத்தான் சொல்ல வருகிறேன். Wax மட்டும் ஈரான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற நிலை இருக்கின்றது. Potassium chloride மற்றும் wax முக்கியமான மூலப்பொருட்களாக இருக்கின்றன. இது மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் தெரியும். ஏனென்றால் நீங்களும் தீப்பெட்டித் தொழில் வைத்திருக்கிறீர்கள். நானும் 10 வருடங்கள் நடத்தியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு தீப்பெட்டித் தொழில் கிடையாது.

திரு. கடம்பூர் ராஜூ: இல்லை, தங்களுக்கும் அதில் நல்ல அனுபவம் இருக்கிறதென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதைப்பற்றி தெரிந்துகொள்வேன்.

திரு. கடம்பூர் ராஜூ: இந்தத் தொழில் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சைனாவிலிருந்து lighter வருவதுதான் பிரச்சினை.

திரு. கடம்பூர் ராஜூ: அதைத்தான் நான் சொல்லப்போகிறேன். Correct–ஆக, நல்ல point ஆக எடுத்துக் கொடுத்திருக்கிறீர்கள்.

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு அமைச்சர் பதில் சொல்வார்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *தீப்பெட்டி உற்பத்தியாளர்களெல்லோரும் அந்தக் கோரிக்கையைச் சொன்னார்கள்.* Lighter *இறக்குமதி சைனாவிலிருந்து முறையற்ற அளவில், அதிகமான அளவிலே வருகிறது. அதையும் தடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருதி, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.* (மணியடிக்கப்பெற்றது) *பாண்டிச்சேரியில்* potassium chloride *இரண்டு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றது. ஈரானில்* wax *உற்பத்தியாகின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *இந்த இரண்டையும்* SIDCO *மூலமாகக் கொள்முதல் செய்து தீப்பெட்டி தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G. *அசோகன் அவர்கள்.*

***திரு. G. அசோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் தீப்பெட்டித் தொழில் தொடங்குவது குறித்து, 1921–ல் அய்ய நாடாரும் சண்முக நாடாரும் படித்துக்கொண்டு வந்து, இந்தியாவில் தீப்பெட்டித் தொழிலை* southern Districts*–க்குக் கொண்டு வந்தார்கள். இது பல இலட்சக்கணக்கான பெண்மணிகள் வேலைபார்க்கிற தொழில். இந்தத் தொழிற்சாலைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாதுகாக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொழில்களைப் பாதுகாக்கும் மாண்புமிகு முதல்வர்.*

திரு. G. அசோகன்: *ஆம். அதேபோல், மூலப்பொருட்கள் விலையெல்லாம் 50 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதம் வரையில் கூடிவிட்டது. ஆனால், தீப்பெட்டித் தொழிலில் 14 ஆண்டுக்காலமாக ஒரு பெட்டி ஒரு ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. அதனுடைய* rate*–ஐக் கூட்டவும் முடியவில்லை. அதனால், அதன் விலையை*

2 ரூபாய் என உயர்த்துவதற்கு மாண்புமிகு தளபதி ஐயா அவர்கள் நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும். 1972–ல், சிட்கோ மூலமாக சிறிய தொழிற்சாலைகளுக்கு concessional price–ல் மூலப் பொருட்கள் வாங்கிக் கொடுத்தார்கள். அதேபோன்று, இப்போது செய்துகொடுத்தால் நன்றாக இருக்கும். அதேபோல், இப்போது சைனாவிலிருந்து வருகிற plastic lighter–களை மற்ற மாநிலங்களில் ban செய்திருக்கிறார்கள். ஏனென்றால், பிளாஸ்டிக்கால் environment பாதிக்கப்படுகிறது. இதை ஒன்றிய அரசு சைனாவிலிருந்து import செய்வதற்கு அனுமதிக்கிறது. Cheap ஆகக் கொண்டு வந்து, 5 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். தீப்பெட்டித் தொழில் நமது தமிழ்நாட்டின் குலத் தொழில். தமிழ்நாட்டிலேயிருந்துதான் 80 சதவிகிதம் தீப்பெட்டிகள் உற்பத்தியாகிச் செல்கின்றன. அதுவும், வறட்சியான மாவட்டங்களான விருதுநகர், வேலூர், தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து செல்கின்றன. எனவே, தயவுசெய்து முதல்வர் ஐயா அவர்கள் இதைக் காப்பாற்ற வேண்டும்.

முற்பகல் 11–35

அதேமாதிரி, GST–ம் 18 சதவிகிதம் வரும் என்று செய்தித்தாள்களில் செய்தி வருகின்றது. 18 சதவிகிதம் வந்ததென்றாலும் மறுபடியும் 1 ரூபாய் என்கின்ற concept–க்குள்தான் tax வரும். அப்படியென்றால் அதுவும் தொழிலாளர்களின் மேல்தான் வந்துவிடும். ஆகையால், COVID time–ல் எங்கள் மாவட்ட அமைச்சர்கள் இரண்டு பேரும் எப்படி தொழிலைக் காப்பாற்றினார்களோ, அதேபோல், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய leadership–ல் இந்தத் தொழிலைக் காப்பாற்றி சிவகாசி மக்கள் அனைவரும் இதில் பயனடையும்படி செய்ய வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் என்பது தென் மாவட்டங்களில் குறிப்பாக தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் ஏழையெளிய சுமார் 6 இலட்சம் மக்களுடைய வாழ்வாதாரத்திற்குப் பயன்படக்கூடியது. சமீப காலங்களில், கொரோனா காலங்களில், இந்தத் தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கதியாக நிற்கக்கூடிய

2022 ஏப்ரல் 12] [திரு. வி.பி. நாகைமாலி]

ஒரு நிலை அங்கேயிருக்கிறது. அதேபோல, தீப்பெட்டியினுடைய மூலப்பொருட்களின் விலையும் உயர்ந்த காரணத்தினாலே ஏறக்குறைய 6 இலட்சம் மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் இந்தச் சபையினுடைய கவனத்தை ஈர்த்து, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி மாதிரி பேசுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் 10 விழுக்காடு கைத்தொழிலாகவும், 90 விழுக்காடு ஆலைத் தொழிலாகவும் நடைபெற்று வருகின்ற சூழல் இருக்கிறது. பல இலட்சக்கணக்கானவர்கள் ஈடுபடுகின்ற இந்தத் தொழில் சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும், வட மாவட்டங்களில் காவேரிப்பட்டணம், குடியாத்தம், தருமபுரி போன்ற பகுதிகளிலேயும் நடைபெற்று வருகின்ற, சாதாரண பெண்கள் ஈடுபடுகின்ற தொழில். இந்தத் தொழில் இப்போது முடங்கியிருக்கின்ற சூழலுக்குக் காரணம், மூலப்பொருட்களினுடைய விலை. குறிப்பாக, இதில் பயன்படுத்தக்கூடியவை காகிதம் மற்றும் மெழுகு. புகளூரில் இருக்கின்ற தமிழ்நாடு காகித ஆலையில் மூலப்பொருட்களின் விலை 20 விழுக்காடு கூடுதலாகியிருக்கிறது. மெழுகினுடைய விலையும் கூடுதலாகியிருக்கிறது. இப்படி மெழுகு விலை கூடுதல், காகித விலை கூடுதல் என்பதோடு மட்டுமல்லாமல், சைனாவிலிருந்து இறக்குமதி செய்கின்ற சிகரெட் பற்ற வைப்பதற்கான* machine. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Lighter.

திரு. ஜி.கே. மணி: Lighter, *அதை விளக்கு என்று சொல்கிறோம். அது தடைபட வேண்டுமென்று சொல்லி பரவலாகக் குரல் எழும்பியிருக்கிறது. ஆக, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்தத் தொழிலை மீண்டும் புனரமைப்பதற்கு, சாதாரண பெண்கள் செய்கின்ற இந்தத் தொழிலில் அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஆவன செய்ய அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமென்று பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரக்கூடிய நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக இந்தத் தொழிலில், கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும். இன்றைக்கு மூலப்பொருட்கள் விலையேற்றம் என்று சொல்கிறார்கள். அதற்கெல்லாம் காரணம், அன்றாடம் ஏறிக்கொண்டிருக்கக்கூடிய டீசல், பெட்ரோல் விலை என்பது நாம் அறிந்ததுதான். இருந்தாலும், மாநில அரசினுடைய நிர்வாக வரம்பிற்குள் இருக்கக்கூடிய மூலப்பொருளான* cardboard *அட்டைகளை* SIDCO *மூலம் வழங்க வேண்டுமென்கின்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கின்றார்கள். அதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும்.*

அதோடுமட்டுமல்லாமல், இதற்குத் தேவையான wax, import *செய்யப்படுகிறது என்று சொன்னாலும்கூட அது பெட்ரோலியத்தினுடைய ஒரு* by–product *என்கின்றவகையிலே, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து அதைக் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டுமென்றும், நலிந்து போயிருக்கக்கூடிய இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்றும் கேட்டு, அவருடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் நிறுவனங்களின் உற்பத்தி நிறுத்தம், அதனால் பாதிக்கப்பட்டுள்ள பெண் தொழிலாளர்களின் நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், திரு. கடம்பூர் ராஜு, திரு. G. அசோகன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. ஜி.கே. மணி, திரு. S.S. பாலாஜி ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.*

2022 ஏப்ரல் 12] [திரு. தா.மோ. அன்பரசன்]

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், 700–க்கும் மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில், 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். இதில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, விருதுநகர் மாவட்டம், சிவகாசி மற்றும் சாத்தூர் ஆகிய பகுதிகளில், சுமார் 500 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களின் நலன்களுக்காக, 6 தொழில் நிறுவனச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், கோவில்பட்டி மற்றும் சாத்தூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த இரண்டு தொழில் நிறுவனச் சங்கங்கள், தீப்பெட்டி தயாரிக்கும் மூலப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது என்று கூறி, உற்பத்தியை நிறுத்தியுள்ளார்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை எட்டிட வேண்டுமென்பதற்காக, நேற்று, மாலை 3–00 மணியளவில் எனது தலைமையில், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன் மற்றும் அரசு உயரதிகாரிகளின் முன்னிலையில், தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்கள், மூலப் பொருட்களின் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், தீப்பெட்டித் தொழில் நிறுவனச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் கூறுகையில், ரஷ்யா–உக்ரைன் போர் மற்றும் பெலாரஸ் மீதான அமெரிக்காவின் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக, பொட்டாசியம் குளோரைடு இறக்குமதி தடைபட்டுள்ளது என்றும், இதனால், மூலப் பொருளான பொட்டாசியம் குளோரைடின் விலை 50 சதவிகிதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது என்றும், மற்றொரு மூலப் பொருளான மெழுகின் விலையும் உயர்ந்துள்ளது என்றும், கொரோனா காலத்தில், காகிதத்தின் பயன்பாடு மிகவும் குறைந்துள்ள காரணத்தினால், ஐரோப்பிய நாடுகள் கழிவுக் காகித இறக்குமதிக்கு தடை விதித்ததாலும், கழிவுக் காகிதத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர். மேலும், உற்பத்திப் பொருளின் ஏற்றுமதி செலவினமும் உயர்ந்துள்ளதால், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்கள். இந்த ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக அரசுக்குத் தெரிய வருவது, தீப்பெட்டியின் ஏற்றுமதி குறைந்துள்ளதால், உற்பத்தித் தேக்கமும் மூலப் பொருட்களின் தட்டுப்பாட்டால், உற்பத்திச் செலவும் உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அரசு தீவிர கவனத்தில் கொண்டு, இத்தொழிலுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப் பொருளான மெழுகினை, தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் மூலமும், Chennai Petroleum Corporation Limited (CPCL) *என்ற நிறுவனத்திலிருந்தும் மொத்தமாகக் கொள்முதல் செய்து, தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், விலை உயர்வுக்கு மற்றொரு முக்கிய காரணமான, கழிவுக் காகித இறக்குமதிக்கு ஐரோப்பிய நாடுகள் விதித்த தடை ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. தடை விலக்கிக்கொள்ளப்பட்டதால், 6 வாரம் முதல் 8 வாரக் காலத்திற்குள் கழிவுக் காகிதம் இறக்குமதியாகும். இதனால் தீப்பெட்டி செய்வதற்கான காகித அட்டையினுடைய விலையும் நிச்சயமாக, படிப்படியாகக் குறையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மற்றொரு மூலப் பொருளான பொட்டாசியம் குளோரைடு, ரஷ்யா, பெலாரஸ் நாடுகளைத் தவிர்த்து, ஜோர்டான் நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருவதால், தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு பொட்டாசியம் குளோரைடு தங்குதடையின்றி கிடைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, உரிய தீர்வு காண அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தமிழகத்தில் உருமாறிய புதிய கொரோனா வைரஸ் பரவுவதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழகத்தில் புதிய கொரோனா வைரஸ் பரவுவதாக வந்துள்ள செய்தி குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி* K. *பழனிசாமி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ந. தளவாய் சுந்தரம், திரு. பி. தங்கமணி, திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, திரு.* M. *ராஜமுத்து மற்றும் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி*